வரைவு
பிப்ரவரி, 2018

# சுற்றுச்சூழல் தாக்க கணிப்பு அறிக்கை

மற்றும்

# சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம்





## டுனா மீன்பிடி துறைமுகம்

திருவொற்றியூர் குப்பம், திருவள்ளூர் மாவட்டம்








## செயல் திட்ட சுருக்க வரைவு

திட்ட அமலாக்குனர்

மீன்வளத்துறை
தமிழ்நாடு அரசு


திட்ட வரைவாளர்

சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் ஆபத்தின்மை பாதுகாப்பு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் - 608 002

# செயல்திட்ட சுருக்க வரைவு

**1.1 முன்னுரை:**

தமிழ்நாடு அரசின் மீன்வளத் துறை, மீனவ சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும், மீனவர்களின் நலன்களை பாதுகாக்கவும், அவர்களின் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான மீன்பிடி நடவடிக்கைகளுக்கு தேவையான உள்கட்டமைப்புகளை மேம்படுத்தவும் இயங்குகிறது.

கடலோர கிராமங்களை கடல் அரிப்பிலிருந்து பாதுகாக்கவும், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், சர்வதேச தரத்தில் மீன்பிடி துறைமுகங்களை ஏற்படுத்தவும் வருடாந்திர நிதியை தமிழக அரசு உறுதி செய்துள்ளது.

தமிழ்நாட்டின் கடற்கரை, மொத்தம் 1,076 கி.மீ. நீளத்திற்கு 13 மாவட்டங்களில் கொரமண்டல், வங்காள விரிகுடா, மன்னார் வளைகுடா மற்றும் பாக் சலசந்தி என நான்கு கடற்கரை மண்டலங்களாக அமைந்துள்ளது. இதில் மொத்தம் 609 கடலோர கிராமங்கள் உள்ளன.

2011ம் ஆண்டின் படி தமிழ்நாட்டில் மீனவ சமுதாய மக்களின் மக்கள் தொகை 1.1 மில்லியனுக்கும் மேல் என கணக்கிடப்பட்டுள்ளது. நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் தமிழ்நாடு 5வது இடத்தில் உள்ளது.2014–15ம் ஆண்டில் மாநிலத்தின் மொத்த மீன் உற்பத்தி 6.97 லட்சம் டன் ஆகும் (கடல் நீரிலிருந்து 4.57 லட்சம் டன், நன்னீர் மற்றும் உப்பு நீரிலிருந்து 2.40 லட்சம் டன்). 2014–15ம் நிதியாண்டில் 93,477 மெட்ரிக் டன் கடல் உணவுப்பொருட்கள் ஏற்றுமதி செய்து 5,308.17 கோடி அண்ணியச்செலவானியை ஈட்டியுள்ளது. ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 0.7 சதவிகிதம் மீன்வளத்துறையின் பங்களிப்பு உள்ளது.

திருவள்ளூர்மாவட்டம் வரலாற்று ரீதியாக அதிக மீன் வளங்கள் மற்றும் சமூக வாழ்வாதாரங்களை கொண்டது.தற்பொழுது மாவட்டத்தின் கடற்கரை பகுதியானது 25 கி.மீ. நீளத்தில் உள்ளது, இதில் சுமார் 50,000 மீனவ சமுதாய மக்கள் வசித்து வருகின்றனர்.



வரைவு

திட்ட அமைவிடமானது வரலாற்று ரீதியாக மீன் வளங்கள் மற்றும் அதிக மீனவர்களின் குடியேற்றங்களை கொண்டுள்ளது. திட்ட அமைவிடத்திலிருந்து சுமார் 3.5 கி.மீ. தெற்கு பகுதியில் சென்னை மீன்பிடி துறைமுகம் அமைந்துள்ளது.

திருவொற்றிழிர் குப்பத்தில் அமையவுள்ள டுனா மீன்பிடி துறைமுகமானது தமிழக அரசுக்கு ஒரு மிக முக்கியமான திட்டமாகும்.அமையவுள்ள மீன்பிடி துறைமுகமானது மீனவர்களின் நலனுக்காக டுனா மீன் பிடிப்பதற்கு மற்றும் அவர்தம் உடைமைகளை பராமரிப்பதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தி தர உள்ளது.

அமையவுள்ள மீன்பிடி துறைமுகமானது, முக்கியமாக படகு போக்குவரத்து மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளால் நிரம்பி வழியும் சென்னை மீன்பிடி துறைமுகத்தை எளிதாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஏனெனில் சில நேரங்களில் துறைமுகத்தில் உள்ள படகுகளை நிறுத்துவதற்கு இடம் பற்றாக்குறையாக உள்ளது. திட்ட அமைவிடமானது சென்னை மீன்பிடி துறைமுகத்திலிருந்கு சுமார் 3.5கி.மீ தொலைவில் அமைந்துள்ளது, ஆகையால் இந்த திட்டமானது துறைமுக நடவடிக்கை மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு ஏதுவாக அமையும்.

மீன்பிடித் துறைமுக வசதிகளை மேம்படுத்துவதற்கும், டுனா மீன் பிடித்தல் மற்றும் பராமரித்தல் போன்றவற்றை ஊக்குவிப்பதற்கும் மீன்வளத்துறையினால் இந்த திட்டம் ஏற்படுத்தப்படவுள்ளது.

தமிழ்நாட்டின் வடசென்னை மண்டலத்தில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான உள்ளூர் மீனவ சமுதாய மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கும் இந்த திட்டம் மிகவும் அவசியமானதாகும்.

தற்போதுள்ள சென்னை மீன்பிடி துறைமுகத்தில் சுமார் 300 மீன்பிடி படகுகள் இயங்குகின்றன, ஒவ்வொரு மாதமும் ஆழ்கடல் பகுதிக்கு சென்று சுமார் 1000 டன்கள் டுனா மீன் பிடிக்கப்படுகிறது.

துறைமுகத்தில் மீன் கையாளும் அரங்குகள், ஏலம் விடும் மண்டபம், குளிர்பதன சேமிப்பு கிடங்கு, எரிபொருள் நிலையம், மின் சேமிப்பு நிலையம் மற்றும் தொழிலாளர்கள் தங்கும் அறைகள் ஆகியவை இந்த திட்டத்தில் அமையவுள்ளது.

அமையவுள்ள டுனா மீன்பிடி துறைமுகத்தை நிறுவுவதற்கான முதல் நிதி 242.00 கோடி ஆகும்.

**1.2 திட்டம் – டுனா மீன்பிடி துறைமுகம்**

திட்டமிடப்பட்டுள்ள டுனா மீன்பிடி துறைமுகத்தின் நோக்கம் மீன்பிடி மற்றும் டுனா வகை மீன் வளங்களை பாதுகாக்கும் திட்டமாக உள்ளது.

திட்ட அமைவிடமானது திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் தாலுக்கா, திருவொற்றியூர்குப்பம் பகுதியில் அமைந்நுள்ளது.

இந்த திட்ட அமைவிடமானது விலோக அளவில் கீழ்கண்டபடி அமைந்துள்ளது.

அட்சரேகை : 13° 09’ 41.37’’ – 13° 10’ 10.22’’ வடக்கு

தீர்க்கரேகை : 80° 18’ 31.4’’ – 80° 18’ 42.33’’ கிழக்கு

அமையவிருக்கும் துறைமுகத்தின் கரையோரத்தில் 831 மீட்டர் நீளமுள்ள தளம் அமைக்கப்பட உள்ளது.

| Sl. No. | Type of quay | | Fishing vessel size | | Quay Length (m) |
|---|---|---|---|---|---|
| | | 10 m FRPs | 18 m trawlers | 18 m Tuna boat | |
| 1 | Fish landing quay (m) | 44* | 140 | 176 | 316 |
| 2 | Outfitting quay (m) | 44* | 40 | 44 | 84 |
| 3 | Repair quay (m) | 22* | 20 | 22 | 42 |
| 4 | Idle-berthing quay (m) | -- | 179 | 100 | 279 |
| **Total** | | **110*** | **379** | **342** | **721** |

வரைவு

*FRP படகுகளின் தரையிறங்க மற்றும் பழுதுபார்ப்பதற்காக 110 மீ.நீளமுள்ள தளம் அமைக்கப்பட உள்ளது. இருப்பினும், அவர்கள்மீன்பிடிக்காத அல்லது கடுமையான வானிலை பருவங்களில் RCCசாய்வு தளம்மூலம் அலை குறைவான பகுதியில் அல்லது கடற்கரையின் மேல் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

15.63 ஹெக்டேர் நிலப்பகுதியில் துறைமுகத்தில் மீன் கையாளும் அரங்குகள், ஏலம் விடும் மண்டபம், குளிர்பதன சேமிப்பு கிடங்கு, எரிபொருள் நிலையம், மின் சேமிப்பு நிலையம் மற்றும் தொழிலாளர்கள் தங்கும் அறைகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தி தரப்பட உள்ளது.

அமையவிருக்கும் துறைமுகமானது வடக்கு பகுதி அலைக்கரை (852மீ) மற்றும் தெற்கு பகுதி அலைக்கரை (1088மீ) ஆகிய இரண்டு பகுதிகளுக்கு நடுவே 30.87 ஹெக்டேர் நீர்பரப்பை கொண்டுள்ளது.

படகுகள் வழிநடத்துவதற்கு துறைமுகத்தின் நீர்பரப்பு பகுதியில் –4 மீட்டர்ஆழம் உறுதி செய்ய வேண்டியது அவசியம். கடல் ஆழம் பற்றிய ஆய்வுகள் அடிப்படையில் (2015) இந்த இடத்தில் 2,00,000 கன மீட்டர்மண்ணை எடுத்து 15.46 ஹெக்டேர்நிலப்பகுதி உருவாக்கப்படவுள்ளது.

அமையவிருக்கும் டுனா மீன்பிடி துறைமுகத்தின் திறன் மற்றும் கையாளக்கூடிய நிகர மீன்களின் மதிப்பு ஆண்டொண்டிற்கு 69,000 டன் என அறியப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய வரைபடம் படம் எண் 1ல் காண்க.

இந்த திட்டமானதுஉள்ளூர் மீனவ சமுதாய மக்களின் நீண்ட கால எதிர்பார்ப்பாகும்.

**1.3 திட்ட அமலாக்குனர்**

தமிழக அரசின் மீன் வளத்துறை சார்பாக இந்த துறைமுக திட்டமானது நடைமுறைபடுத்தப்பட உள்ளது. இந்த திட்டமானது ஒரு முழுமையான மீன்பிடி துறைமுகத்தினை நோக்கி

வரைவு

கடலோரஉள்கட்டமைப்புகளாக கருதப்படுகிறது.அமையவுள்ள டுனா மீன்பிடி துறைமுகத்தின் நிகர மீன் கையாளும் திறன் ஆண்டொண்டிற்கு 69,000 டன் ஆகும். ஆமைவிடத்தின் நீர்பரப்பு பகுதி 30.87 ஹெக்டேர்: நிலப்பகுதி 15.63 ஹெக்டேர் ஆகும்.

இத்திட்டத்திற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பகுதியை படம் எண் 2ல் காண்க.

வரைவு




படம் 1: திட்ட அமைவிடம் – டுனா மீன்பிடி துறைமுகம்




**படம் 2: அமைப்புத் திட்டம்**

இந்த மீன்பிடி துறைமுகத்திற்காக முன்வைக்கப்பட்டுள்ள முக்கிய வசதிகள் பின்வருமாறு:

- அலைக்கரை
    - வடக்கு அலைக்கரை: 852 மீட்டர்
    - தெற்கு அலைக்கரை: 1088 மீட்டர்
- ஆழப்படுத்துதல் மற்றும் அப்புறப்படுத்துதல்: 2,00,000 கன மீட்டர்
- நிலம் மீட்பு மற்றும் சமப்படுத்துதல்
- Quays (RCC Bored pile) for MFVs 730மீ
- Quays (RCC Bored pile) for FRPs 110மீ
- துறைமுக வளாகத்திற்குள்ளான உட்புற சாலை வசதி
- மீன் கையாளுதல் மற்றும் ஏலம் விடும் கூடம் (1273 ச.மீ.)
- மீன் கையாளுதல் மற்றும் பதப்படுத்தும் கூடம் (1200 ச.மீ)
- மீன் கையாளுதல் மற்றும் ஏலம் விடும் கூடம் – ஃபைபர் படகு (258 ச.மீ.)
- மீனவர் நிர்வாக அலுவலகம் (163 ச.மீ.)
- மீன்பிடி உபகரணங்கள்கூடம் (9nos. X 176.87 ச.மீ.) 1591 ச.மீ.
- வலை பிண்ணும் கூடம் (4nos. X 258.10 ச.மீ.) 1032.4 ச.மீ.
- மீனவர் ஓய்வு கூடம் (3nos. X 218.0 ச.மீ.) 654.0 ச.மீ.
- படகு பழுது பார்க்கும் நிலையம் (2nos. X 100.45 ச.மீ.) 200.90 ச.மீ.
- உணவகம் (137.79 ச.மீ.)

வரைவு

- தங்கும் இடம் (320.90 ச.மீ.)
- பாதுகாவலர் இல்லம் (26.50 ச.மீ.)
- சுற்றுச்சுவர் 1175 மீட்டர்
- வானொலி தகவல் கோபுரம் (199.80 ச.மீ.)
- பொது கழிப்பிடம் (3nos. X 35.86 ச.மீ.) 107.58 ச.மீ.
- ஊடுருவல் மற்றும் வானொலி தொடர்பு சாதனங்கள்
- மின்சார விநியோகம் மற்றும் பொது விளக்குகள்
- நன்னீர் சேமிப்பு, நிலத்தடி நீர் விநியோகம், மற்றும் மேல்நிலை நீர் தேக்க தொட்டி
- கடல் நீர் வழங்குதல் மற்றும் விநியோகம்
- கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், சகதிநீர் மற்றும் கழிவுநீர் வாய்க்கால்
- பசுமை அபிவிருத்தி – நுழைவு வாயில் மற்றும் பல இடங்களிலும்
- தீ அணைத்தல், தீயணைப்பு கருவி மற்றும் பிற உபகரணங்கள்

**1.4 சுற்றுச்சூழல் தாக்க கணிப்பு அறிக்கை மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்ட ஆய்வாளர்**

இந்திய அரசு மற்றும் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தினால் நியமிக்கப்பட்ட இந்திய தர நிர்ணய குழு (Quality Council of India) வின் அங்கிகாரம் பெற்ற சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் ஆபத்தின்மை பாதுகாப்பு மையம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,; டுனா மீன்பிடி துறைமுக விரிவாக்க திட்டத்தின் சுற்றுச்சூழல் தாக்க கணிப்பு அறிக்கை அளிக்க

நியமிக்கப்பட்டது. இந்த மையத்தின் தர அனுமதி பற்றிய விரிவான தகவல்களுக்கு www.environmentclearance.nic.in என்ற இனையதளத்திற்குச் சென்று பார்க்கலாம்.

### 1.5 சுற்றுச்சூழல் தாக்க கணிப்பு அறிக்கை வரைவு

திட்ட அமைவிடம் மற்றும் அதனை சுற்றியுள்ள 10 கி.மீ. சுற்றளவில் தற்போதைய தட்பவெப்ப நிலை, காற்று, நீர், ஒலி, மண்/வணடல் படிவு, சமூக பொருளாதாரம், நிலம், நன்னீர் மற்றும் கடல்வாழ் உயிரினங்கள் (தாவரங்கள் மற்றும் விலங்குகள்) கண்டறிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இத்திட்டத்தின் கடல்நீர் இயக்க விசையின் மதிப்பீடுகளை அறிய நீர் இயக்க விசை மற்றும் கணித மாதிரிகள்; ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டத்தை நடைமுறைப்படுத்த மூன்று பிரிவுகளில் வடிவமைத்து தரப்பட்டுள்ளது.அவைகள் முறையே

1. திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல்
2. கட்டுமானம்
3. இயக்குதல் மற்றும் பராமரித்தல்

கட்டுமான பராமரிப்பு மற்றும் கண்காணிப்பு, நீர் சுத்திகரிப்பு நிலையம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் போன்ற சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் கடல் வளங்கள் பாதுகாப்பு போன்றவைகள் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

வரைவு

## 1.6 விரிவாக்க திட்ட வரைவு – டுனா மீன்பிடி துறைமுகம்

திட்ட அமைவிடமானது பல ஆண்டு காலமாக உள்ளூர்; மீனவ சமூகத்தினரால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.கடல் அரிப்பை தடுக்கும் வகையில் இந்த பகுதியில் 13 தூண்டில் வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக சுமார் 10 கி.மீ. நீளம் கொண்ட கடற்கரை பகுதி கடல் அரிப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டமானது ஒரு முழுமையான உள்கட்டமைப்புகளை கொண்ட மீன்பிடி துறைமுகமாகும்.அமையவுள்ள டுனா மீன்பிடி துறைமுகத்தின் நிகர மீன் கையாளும் திறன் ஆண்டொண்டிற்கு 69,000 டன் ஆகும்.

இந்த துறைமுகத்தின் நீர்பரப்பானது இரண்டு அலைக்கரைகளுக்கு இடையில் 30.87 ஹெக்டேர் என திட்டமிடப்பட்டுள்ளது. 15.63 ஹெக்டேர் நிலப்பகுதி உருவாக்கப்படவுள்ளது.

பாதுகாப்பான முறையில் மீன் பிடிப்பதற்கும் படகு கையாளுவதற்கும் பொறியியல் அடிப்படையில் தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

## 1.7 திட்ட அமைவிடத்தின் கடற்கரை பகுதி

புதிய திட்ட அமைவிடமானது திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் தாலுக்கா, திருவொற்றியூர் குப்பத்தில் கொரமண்டல் கடல் பகுதியில் அமைந்துள்ளது. தேர்வு செய்யப்பட்டுள்ள இடமானது மீன்பிடி துறைமுகம் அமைவதற்கு ஏதுவான இடமாகும்.

திட்ட அமைவிடத்தின் செயற்கைக்கொள் படத்தினை படம் எண் 3ல் காண்க.

வரைவு

திட்ட அமைவிடத்திற்கான நீர்மட்டம் மற்றும் நீரோட்டத்தின் மாற்றங்களை வடிவமைக்க ஒரு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வானது புலிகாட் மற்றும் பெசன்ட் நகர் பகுதிக்கு இடையே இட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

திட்ட அமைவிடத்தில் கடல்ஆலையின்; மாற்றங்கள், மண் படிவுகள், கடல் அரிப்புகள், கடலின் ஆழம் போன்றவற்றிற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு மாதிரிகள் கொடுக்கப்பட்டுள்ளது.

10 ஆண்டுகளில் (2005 – 2015) திட்ட அமைவிடத்தின் கடற்கரையோரத்தில் 4 இடங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கடற்கரை மாற்றத்திற்கான மாதிரிகள் தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த திட்டத்தினால் 10 கி.மீ சுற்றளவிற்கு எந்தவிதமான தாக்கங்களும் அதிக அளவில் இருக்காது

**1.8 தற்போதுள்ள சூழ்நிலை**

அமையவிருக்கும் துறைமுக பகுதியானது பொறியியல் அடிப்படையில் அமைக்கப்பட்ட 13 தூண்டில் வளைவுகளைக்கொண்ட கடற்கரை ஆகும்.

திட்டத்தின் அமைவிடமானது கடற்கரை பகுதியை பாதுகாக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள தூண்டில் வளைவு உள்ள இடத்தில் அமையவுள்ளது.

வரைவு




படம் 3: திட்ட அமைவிடத்தின் செயற்கைகோள் படம்

## 1.9 டுனா துறைமுகத்தின் தேவை

திருவொற்றியூர் குப்பம் மீனவ சமுதாய மக்களின் முன்னேற்றத்திற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் ஒரு நிலையான முழு கட்டமைப்பில் அமையவுள்ள டுனா மீன்பிடி துறைமுகமானது மிகவும் பயனுள்ளதாக அமையும்.திருவொற்றியூர் குப்பம் ஒரு திறந்த கடற்கரை பகுதியில் அமைந்துள்ளது, மற்றும் மீனவர்கள் தங்கள் இயந்திரமயமாக்கப்பட்ட செவுள் வலை படகுகளை டுனா மீன்படி படகுகளாக மாற்றிக்கொண்டு டுனா மீன் பிடிக்க செல்வதற்கு ஏதுவாக அமையவுள்ளது.

இப்பகுதி மீனவர்கள் ஒரு மீன்பிடி பருவத்திற்கு 20 முறை கடலுக்கு சென்று வருகின்றனர், ஒவ்வொரு முறை பயணத்தின்போதும் 10 நாட்கள் கடலினுள் இருக்கிறார்கள் ஒவ்வொரு பயணத்திற்கும் 9 டன் மீன் பிடிப்பதினால் ஒரு வருடத்திற்கு 180 டன் மீன் என ஒரு படகிற்கு 1கோடி ரூபாய் வருவாய ஈட்ட வாய்ப்புள்ளது.

மீனவர்கள் துறைமுகத்தை நிர்மானிப்பதற்கும், மீனவ சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கும், கடற்கரையின் அரிப்பு மற்றும் இப்பகுதியின் மீனவர்களை பாதுகாக்கவும் இந்த துறைமுகமானது வளர்ந்து வரும் மீனவர்களுக்கு பலவிதமான நன்மைகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. டுனா மீன்பிடி துறைமுகமானது உள்ளூர் வேலையில்லா மக்களுக்கும், மீனவர்களுக்கும் அதிக வேலை வாய்ப்பினை உருவாக்கி கொடுக்கும். இத்திட்டத்தினால் அதிகப்படியான மீன்பிடி தொழிலாளரகள், மீன் விற்பனையாளர்கள், பெண் வியாபாரிகள் போன்றவர்கள் அதிக அளவில் பயனடைவார்கள்.

## 1.10 கடலோர வரைமுறை பகுதி–வரைபடங்கள்

இந்த திட்டத்தின் கடலோர வரைமுறை மணடலம் பகுதி I க்கு உட்பட்டது என அண்ணா பல்கலைக்கழகத்திலுள்ள தொலையுணர்வு தொழில் நுட்ப மையத்தின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

திட்ட அமைவிடத்தின் கடலோர வரைமுறை மணடலத்தின் வரைபடம் படம் எண் 4ல் காண்க.

வரைவு




படம் 4: கடற்கரை வரைமுறை விதி மண்டலத்தின் படம்

## 1.11 நீர் இயக்க விசை ஆய்வு

கடலின் அலை மற்றும் அவற்றின் சீற்றம் குறித்த தகவல்களை கண்டறிந்து ஆய்வுகள் மேற்கொண்டு, புதியதாக நிறுவப்படவுள்ள டுனா மீன்பிடி துறைமுகத்தின் கட்டுமான அமைப்புகளுக்கான அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆய்வானது Delft3D தொகுப்பை பயன்படுத்தி நடத்தப்பட்டது.Delft3D-Flow மாதிரியானது 2D அல்லது 3D வடிவில் பெற, கீழ்கண்ட காரணிகளை கணக்கில் எடுத்துக்கொள்கிறது.

- அலையின் வேகம்
- பூமியின் சுழற்சி விளைவு
- அடர்த்தி ஓட்டம்
- வானிலை மற்றும் காலநிலை மாறுபடும் போது ஏற்படும் காற்று மற்றும் அழுத்தம்.
- ஆற்று நீரின் காரணமாக ஏறிபடும் மாற்றங்கள்
- வெப்ப வெளியேற்றம், கழிவு வெளியேற்றம் மற்றும் வேறு ஏதேனும் இடத்தில்ருந்து மற்றும் ஆழமான கடல் பகுதியிலிருந்து வரும் குளிர்ந்த நீர்
- வெயில் காலம் மற்றும் வெள;ளத்தினால் ஏற்படும் மாற்றம்.

## 1.12 சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை ஆய்வு

திட்ட அமைவிடமான டுனா மீன்பிடி துறைமுகம் மற்றும் அதனை சுற்றியுள்ள 10 கி.மீ. சுற்றளவில் சுற்றுப்புறச்சூழல் தன்மை பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வுகள் அனைத்தும் மாதிரி படிவங்கள் சேகரித்து முறையான நெறிமுறைகளை பயனபடுத்தி சமர்பிக்கப்பட்டுள்ளது.

ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பகுதியை படம் எண் 5ல் காண்க.

வரைவு




படம் 5: துறைமுக சுற்றுப்புற சூழ்நிலை – 10 கி.மீ. சுற்றளவு

### 1.12.1 தட்பவெப்ப நிலை

சுற்றுச்சூழலின் தட்பவெப்ப தன்மைகள், டுனா மீன்பிடி துறைமுகத்தின் சுற்றுப்புறத்தில் ஆய்வு செய்யப்பட்டன. கீழ்கண்ட தகவல்கள் ஆய்வுகளின் அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ளது.

- வெப்பம் (அதிகபட்ச அளவு, குறைந்தபட்ச அளவு)
- காற்றின் வேகம் மற்றும் திசை
- காற்றிலுள்ள ஈரப்பதம்
- மழையின் அளவு

### 1.12.2 காற்றின் தன்மை

டுனா மீன்பிடி துறைமுகத்திலிருந்து 10 கி.மீ. சுற்றளவு பகுதியில் காற்றின் வேகம் மற்றும் அது வீசும் திசைக்கேற்ப பத்து இடங்களில் கீழ்கண்ட காற்றில் கலந்துள்ள மாசுகள் அளவிடப்பட்டுள்ளன.

- காற்றில் மிதக்கும் துகள்கள் (10 µm)
- காற்றில் மிதக்கும் துகள்கள் (2.5 µm)
- சல்பர்–டை–ஆக்ஸைடு (µg/m3)
- நைட்ரஜன் ஆக்ஸைடு (µg/m3)
- கார்பன் மோனாக்;ஸைடு (µg/m3)

பெரும்பான்மையான சூழல்களில், இவற்றின் அளயிடுகள் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனபாதுகாப்பு அளவீடுகளுக்கு குறைவாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

### 1.12.3 நீரின் தன்மை

நன்நீர் மற்றும் கடல் நீரின் தன்மை, கடல் அலையின் வேகம், உயரம், மற்றும் அவற்றில் கலந்துள்ள கனிமங்களின் அளவுகள் கண்டறியப்பட்டுள்ளன.

### 1.12.4 மண்ணின் தன்மை

நிலம் மற்றும் கடல் பரப்பில் மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

### 1.12.5 கடலோர உயிரியல்

கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் நில வாழ் உயிரினங்களின் தன்மைகள், அவைகளின் அளயிடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

### 1.12.6 சமூக தாக்க மதிப்பீடு

இத்திட்டத்தை செயல்படுத்துவதின் மூலம் மீன்பிடி துறைமுக நிர்வாகம் அதன் சுற்றியுள்ள பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேன்மேலும் உயர்த்தும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.புதியதாக எந்தவிதமான நிலத்தேவைகள் இல்லாததால் எந்தவிதமான சமூக புதிய திட்டங்கள், முறையே குடியமர்த்துதல் மற்றும் அப்புறப்படுத்துதல் தேவையில்லை.

## 1.13 தாக்கம் மதிப்பீடு ஆய்வு

புதிதாக நிறுவபடவுள்ள மீன்பிடி துறைமுகம், அதனுடைய தரம் ஆகியவற்றை கண்டறிந்து அவற்றால் ஏற்படும் கண்ணுக்கு தெரியாத மாசுகள், காற்றில் கலக்கும் அசுத்தங்கள் மற்றும் கடல்சார்ந்த மாசு மற்றும் தொழிற்சார்ந்த உடல் நலம் போன்றவற்றை மதிப்பீடு செய்ய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

### 1.13.1 திட்ட விரிவாக்க இடம்: ஆய்வு மற்றும் தாக்கம்

இத்திட்ட அமைவிடத்தின் கடல் சார்ந்த இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் சம்மந்தமான ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

### 1.13.2 செயல்திட்ட பணி குறித்த தாக்கம்

ஊத்தேசிக்கப்பட்டுள்ள மீன்களின் வகைகள் அதனால் உண்டாகும் மாசுகளின் அளவு மற்றும் தன்மையை கண்டறிந்து அதற்கேற்றவாறு திட்டத்தினை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

## 1.14 சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம்

சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டத்தை நடைமுறைப்படுத்த மூன்று பிரிவுகளில் வடிவமைக்கபட்டது.அவைகள் முறையே

- திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல்
- கட்டுமானம்
- இயக்குதல் மற்றும் பராமரித்தல்

டுனா மீன்பிடி துறைமுகம் தனது தலைமை நிர்வாக அலுவலகம் மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டத்தை அதற்கு தேவையான நிதி உதவியை பெற்று பசுமை அபிவிருத்தி திட்டம் மற்றும் நிலத்தடி நீர் சேகரிப்பு போன்ற திட்டங்களை செயல்படுத்த முடிவு செய்துள்ளது.

## 1.15 பேரிடர் மேலாண்மை திட்டம்

இயற்கை சீற்றங்களிலிருந்து, மீன்பிடி துறைமுகத்தினை காக்கவும், துறைமுக செயல்பாடுகளினால் எந்தவிதமான பேரிடர் ஏற்படாமல் இருக்கவும், புதிய பேரிடர் மேலாண்மை திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இங்கு ஏற்படும் நிலநடுக்கம், புயல், சுனாமி மற்றும் அதனுடைய தாக்கத்தை கணக்கிட்டு அதை எவ்வாறு எதிர்கொள்வது என்பதை பற்றி விரிவாக பேரிடர் மேலாண்மை திட்டத்தில் வரையறுக்கப்பட்டள்ளது.



வரைவு

## 1.16 இடர் பகுப்பாய்வு மற்றும் மேலாண்மை திட்டம்

டுனா மீன்பிடி துறைமுகம் மீன்களை கையாளுவதற்கும் மற்றும் பாதுகாத்து வைப்பதில் ஏற்பட ஏதுவாயுள்ள இடர்பாடுகளை கண்காணித்து அதற்கேற்றவாறு மாவட்ட மற்றும் மாநில இடர் பகுப்பாய்வு குழுவினருடன் ஒருங்கிணைந்து செயல்பட திட்டமிடப்பட்டுள்ளது.

## 1.17 சுற்றுச்சூழல் மேலாண்மை தனிப்பிரிவு

சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டத்தை செயல்படுத்தவும், மேற்பார்வையிடவும், தனி திறமை வாய்ந்த மற்றும் தனிப்பயிற்சி பெற்ற நபர்களைப் பெற்ற மேலாண்மை குழு ஒன்று அமைப்பக்கப்பட்டுள்ளது. துறைமுக நிர்வாகம் நிதி உதவிகளை தமிழ்நாடு மீன்வளத்துறையிடமிருந்து பெற்றுக்கொள்ளும்.சுற்றுச்சூழல் மேலாண்மை பிரிவின் செயல்பாடுகளை நிர்வகிக்க ஒவ்வொரு குழுவிலிருந்தும் தலா ஒரு அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுற்றுச்சூழல் கட்டுப்பாட்டிற்கு ஆய்வுக்கூடம் மற்றும் நூலக வசதிகள் செய்யப்பட உள்ளது. இதன் நிர்வாக முறைமை, படம் எண்–6ல் காண்பிக்கப்பட்டுள்ளது.

வரைவு

**படம் எண்:6 சுற்றுச்சூழல் மேலாண்மை தனிப்பிரிவு**

**டுனா மீன்பிடி துறைமுகம்**

**நிறுவன தலைவர்**

↓

**முதன்மை பொறியாளர்**

↓

**அலுவலர்–1**
**மீன் கையாளுதல்,**
**மீன் வெளியேற்றும் அமைப்புகள்,**
**சாலைகள்/நீர்த்தெளி மேம்பாடு**

**அலுவலர்–2**
**பசுமை அபிவிருத்தி திட்டம்,**
**மழைநீர் சேகரிப்பு,**
**கடல்வாழ் உயிரினங்களின் கண்காணிப்பு**
**பொறியியல் மேலாண்மை பிரிவு**

**அலுவலர்–3**
**இடர் பகுப்பாய்வு மற்றும்**
**மேலாண்மை திட்டம்**
**பேரிடர் மேலாண்மை திட்டம்**

**அலுவலர்–4**
**சமூகம் மற்றும் உடல்நலம்**
**கண்காணிப்பு**
**மாசுக்கட்டுப்பாட்டு**
**வாரியம்/**
**உள்ளூர் நிர்வாகம்/வன**
**பாதுகாப்பு**

வரைவு